சுண்டுக்குளி கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 29 [illegible] 28 இதழ் 816
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-9=1985

## வானில் வந்தவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம்

### ஒருவர் பலி; மூவர் தப்பினர்

(கிளிநொச்சி)

வாகனத்தில் வந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானதாகவும் மூவர் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை முறிகண்டிக்கு அண்மையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பஸ்ஸில் பிரயாணிகளுடன் சேர்ந்து சிவிலுடையிலிருந்த கிளிநொச்சிப் பொலிசார், சந்தேகத்தின் பேரில் மஸ்ஸுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் வான்சாரதி ஸ்தலத்திலேயே பலியானதாகவும், வானிலிருந்த மற்ற மூவரும் தப்பியோடி விட்டதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்குச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸிலிருந்தே துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவரின் சடலம் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

# இனப் பிரச்னை சில தினங்களில் சந்திப்பு:

# நீதியான இறுதித்தீர்வு நிச்சயம்!

## ஆலம்கான் நம்பிக்கை

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தீவிரவாதக் குழுத் தலைவர்களுக்கும் இடையில் அடுத்த சில தினங்களில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் நீதியான இறுதித் தீர்வு ஒன்று நிச்சயம் ஏற்படும் என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஜனாப் குர்ஷித் ஆலம் கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய வெளியுறவுக் கொள்கை தொடர்பாக புதுடில்லியில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் நேற்று அவர் கருத்து வெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைஇனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசு தொடர்ந்து ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

இப்பிரச்னை தொடர்பான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் இன்னும் சில தினங்களில் நடைபெறும். இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கும் தமிழ்த் தீவிரவாத தலைவர்களுக்குமிடையே ஓர் இணக்கமான தீர்வு ஏற்பட்டு இலங்கையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு நீதியானதும், நியாயமானதும் இறுதியானதுமான ஓர் நிரந்தரத் தீர்வு கிட்டும் என்றார்.

இந்தப்பிரச்னை தீர்க்கப்பட்டு இலங்கையிலிருந்து அகதிகளாக பத்துலட்சம் சுமார் (5-ம் பக்கம் பார்க்க)

## 'இலங்கை அரசு யோசனை வெறும் கண்துடைப்பு!

### ஈழவேந்தன் கண்டனம்

(புதுடில்லி)

''இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசு அண்மையில் தெரிவித்த யோசனைகள் தமிழர்களின் நியாயமான அடிப்படை உணர்வுகளைக்கூட ஓரளவேனும் திருப்திப்படுத்தவில்லை வெறும் கண்துடைப்பு'' என்று தமிழீழ விடுதலை அணி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமருக்கு இது குறித்து மேற்படி அணி கடிதமொன்று அனுப்பிவைத்துள்ளது.

இது சம்பந்தமாக புதுடில்லியில் இந்த அணியின் செயலாளர் திரு ஈழவேந்தன் கருத்து வெளியிடுகையில், ''தமிழர் (5-ம் பக்கம் பார்க்க)

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த ஈழம் தேசிய விடுதலை முன்னணி ராஜீவை சந்திக்கவேண்டும்!

### சென்னையில் 'அமிர்' கருத்து

(சென்னை)

''இலங்கை இனப்பிரச்னை தீர்வு சம்பந்தமாக உருவாக்கப்பட்டுள்ள புதிய அணுகுமுறைபற்றி மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இந்திய மத்திய அரசு விடுத்துள்ள அழைப்பை ஈழம் தேசிய 8 ம் பக்கத் தொடர்ச்சி

## முல்லைத்தீவில் ஏற்பட்ட பதற்றம்

(முல்லைத்தீவு)

நேற்று முன்தினம் பகல் பதினொரு மணியளவில் முல்லைத்தீவுப் பகுதியில் தாழப் பறந்த 'ஹெலிகொப்டரைக் கண்டு மக்கள் பீதிகொண்டனர்.

ஹெலிகொப்டரிலிருந்து வெடிச்சத்தங்கள் கேட்ட போதும் எவரும் இறக்கவோ காயப்படவோ இல்லை. வயல் வெளிகளிலும், பொது இடங்களிலும் இருந்த மக்கள் பயத்தினால் கலவரமடைந்து தமது இருப்பிடங்கள் நோக்கி விரைந்தனர் இதனால் அப்பகுதியில் சிலமணிநேரம் பதற்றம் நிலவியது.

## அந்தச்சத்தங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நீண்ட நாட்களுக்குப்பின்னர் நேற்றிரவு எட்டு மணியளவில் அடுத்தடுத்து இருகுண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்ததால் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. (மா)

## ஜனார்த்தனன் கண்டனம்

(சென்னை)

வவுனியா விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்காக 5000 தமிழர்களை இலங்கை அதிகாரிகள் அவர்களது வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியுள்ளார்கள் என்று உலக தமிழர் இளைஞர் அமைப்பின் தலைவர் திரு. டி. ஆர். ஜனார்த்தனன் கண்ட (5-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்படுகொலையைத் தடுக்க தமிழக—மத்திய அரசு இணைந்து செயல்படவேண்டும்!

### அனைத்துக்கட்சி மாநாட்டில் கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுவதற்கு சென்னையில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் கூட்டிய மேற்படி மகாநாட்டில் நாற்பது பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் முப்பத்து மூன்றுபேரே கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான 'தமிழ் ஈழ ஆதரவாளர்கள் கூட்டமைப்பு' மேற்படி மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

நேற்றைய மாநாட்டின் முடிவில் தமிழ் நாடு மின்சாரத்துறை அமைச்சர் திரு. (5ம் பக்கம் பார்க்க)

## மூன்று வீடுகள் தீக்கிரை

(வவனியா)

வவனியாகூசைப்பிள்ளையார் குளத்தில் சேரிப்பகுதியிலுள்ள மூன்று தமிழர்களுடைய வீடுகள் கடந்த புதன்கிழமை நண்பகல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

## முல்கிரிகல ஐ தே க. வெற்றி

(கொழும்பு)

முல்கிரிகல பாராளுமன்ற இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 1,329 பெரும்பான்மை வாக்குகளுடன் (5-ம் பக்கம் பார்க்க)

## தேர்த்திருவிழாவில் திரளான பக்தர்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் நேற்றுநடைபெற்ற தேர்த்திருவிழாவில் பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் கலந்து கொண்டார்கள்

அதிகாலையிலேயே யாழ். நகரின் நாலாபுற வீதிகளூடாகவும் தேரேறும் குமரனைக் காண ஆர்வத்தோடு முதியோரும் மாதரும் குழந்தைகளும்சாரிசாரியாகச்சென்றனர்.

தகிக்கும் வெயிலிலும் தூர இடங்களிலிருந்து காவடி (5-ம் பக்கம் பார்க்க)

## அநாமதேய எச்சரிக்கை கடிதம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் சம்பந்தமாக ஓர் எச்சரிக்கை அநாமதேயக் கடிதம் ஒன்று நேற்றிரவு 10-30 மணிக்கு 'ஈழநாடு' வுக்குக் கிடைத்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து இருநூறு யார் சுற்றளவில் உள்ளவர்களை இன்று காலைக்குள் வெளியேற வேண்டும் என்பதுடன் சில அதிர்ச்சியான தகவலும் இதில் எழுதப்பட்டிருந்தது.

## கரூரில் நடைபெற்ற உண்ணாவிரத, ஊர்வலம்

(கரூர்)

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய. மாநில அரசுகளை வற்புறுத்துவதற்காக கரூரில் நேற்று உண்ணாவிரதமும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடைபெற்றது.

'வார அசோஸியேஷன்ஸ்' எனும் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த உண்ணாவிரதத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்

டாக்டர் எஸ் ஏ. பாலசிங்கம், சட்டத்தரணி என் சந்திரசேகரா ஆகியோர்மீது (5-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் தபாற் கந்தோருக்குப் பக்கத்தில் மதிலுடன் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு Your Shop. மானிப்பாய் வடக்கு. மானிப்பாய். 706

றேடியோ வகைகள், மேசை விளக்குகள், மிருதங்கம், சுதிப் பெட்டி, சைக்கிள், தீராந்திகள், அரிகல்லு விற்பனைக்குண்டு பார்வையிடும் நேரம்: இன்று சனி மட்டும் 2 மணி முதல் 5 மணி வரை. 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை. 711

84 சிறி 5119 இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள Bajah ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வதி பாலர் பாடசாலை திருநெல்வேலி சந்தி, பலாலி றோட். 714

பரந்தன் 6-ம் வாய்க்கால் 10 ஏக்கர் நெற்காணி 2 போகமும் செய்யக் கூடியது. தொடர்பு: எஸ். சின்னத்தம்பி, கின்கோ, கண்டி வீதி, கிளிநொச்சி 703

## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவுசெய்ய விரும்புவோர், தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்குபதிவுத்தபால் மூலம் 21-09-85ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடவேண்டும் கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்துதல்வேண்டும். வைப்புப்பணம் இடாதோரின் கேள்விப்பத்திரம் எதுவித காரணத்தைவிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும், விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா 5/-ஐயும் செலுத்தி விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ளலாம் உரிய பணத்தை நேரடியாகவோ இன்றேல் தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பிவைத்தால் கேள்வி விண்ணப்பப் பத்திரம் உரியவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

வெற்றுச்சாக்கு விபரம்

| | | |
|---|---|---|
| 1. | பிறிமா சாக்கு | 160 |
| 2. | அரிசி 2½ புசல் | 845 |
| 3. | நவதானியம் | 111 |
| 4. | அரிசி 1 அந் | 517 |
| 5. | சீனி 1 அந் | 489 |
| 6. | கற்கண்டு மைசூர் | 94 |
| 7 | சர்க்கரை | 56 |
| 8 | இழக்சம் | 478 |
| 9. | சீனி, மா பை | 250 |
| | | 3000 |

கழிவு மா 316 Kg.
கழிவு சீனி 184Kg

பொது முகாமையாளர்,
10-9-85. 673

## பயிற்சி

மூன்று வருட மருத்துவ தாதிப் பயிற்சி ஆங்கில மொழி மூலம் டிப்ளோமா பயிற்சி ஆரம்பித்துவிட்டன. B.Sc Nursing பட்டப்படிப்பு ஆரம்பமாக உள்ளது. இப்பயிற்சிக்கு O/Lல் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும், A/Lல் நான்கு பாடங்களிலும் (Bio Science) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். 30-9-85க்கு முன் நேரில் வந்து விண்ணப்பிக்கவும்: அதிபர், உயர்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 660

## தவறிவிட்டது

சரோஜினிதேவி சிவரட்ணம் இல. 9672 இலங்கை வங்கி, ஸ்ரான்லி றோட் என்னும் எனது வங்கிக் கணக்குப் புத்தகம் 11-9-85ல் சிவன் பண்ணை றோட்டில் காணமல் போய் விட்டது கண்டெடுத்தவர்கள் 29, சிவன் பண்ணை றோட், கொட்டடி அல்லது 179, சிவாஸ் ஸ்டோர்ஸ், சிவன் பண்ணை றோட் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 707

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்மயானந்தகுரு சிவானந்தகுருவின் மரண சாதனமில்லாச் சொத்து விடயமாக.

— இறந்தவர்,

சிவானந்தகுருகைம்பெண் புவனேந்திரராணி புவனஜோதி, நடராஜ வீதி, வல்வெட்டித்துறை,

— மனுதார்,

சொத்துறுதிசார் நியாயாதிக்கம் வழ. இல: } 1225. T

எதிராக

1. சிவானந்தகுரு மகள் மோகன பராயமற்றவர்,
2. சிவானந்தகுரு திருமால் பராயமற்றர்,
3. நடராஜபிள்ளை திருஞானசுந்தரம் யாவரும் வல்வெட்டித்துறை.

— எதிர் மனுதாரர்கள்,

மேலே பெயர் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கு இணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ம் திகதி காலை 9-30மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதுஎன்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப் படுகின்றீர்.

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 26-ம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி ஒப்பம்,
பதிவாளர்.

வரைவு:
ஆர். ஆர் தர்மரட்ணம்
மனுதாரின் சட்டத்தரணி
695

## காணவில்லை

இல. 540691738X கொண்ட எனது தேசிய அடையாள அட்டை 12-09-85ல் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் S. J. அலோசியஸ், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம். ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கபடும். 710

## மூளாய் வைத்தியசாலை

(சுழிபுரம்)

மூளாய் ஐக்கிய கூட்டுறவுச் வைத்தியசாலை சங்க விசேட பொதுக்கூட்டத்தை, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. மு. சந்தையாஇம் மாதம் 28 ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடாத்தவுள்ளார். இரு முக்கிய தீர்மானங்களுக்குப் பின்னர் நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு செய்யப் படுவார்கள்.

## தொழில் நுட்ப கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்பக்கல்லூரி நிறுவனத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டிஇன்றுசனிக்கிழமை நடைபெறும்.

தொழில் நுட்பக்கல்லூரி இயக்குனர் திரு. ஜோய்பிள்ளைநாயகம் தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு தென்னிந்திய திருச்சபையின் வடபிராந்திய அத்தியட்சர் வணக்கத்துக்குரிய டி. ஜே. அம்பலவாணர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ச)

## முதல் சந்தர்ப்பத்து முற்றுன கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வள்ளிநாயகி இராமச்சந்திரனின் மரணசாதனச்சொத்து சம்பந்தப் பட்ட விடயம்.

— காலஞ்சென்றவர்,

இலக்கம். 231/ T

அத்துடன்

1977இன் 20ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்ட சிவில் நடைமுறைக் கோவை (அத். 101) இன் 518, 529 ஆகிய இலக்கப் பிரிவுகளின் கீழ் செய்யப் படும் விண்ணப்பம் சம்பந்தமான விடயம்.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த கனகசுந்தரம் இராமச்சந்திரன் ஜெயகுமார்.

மனுதாரர்

மேற்பெயரிட்ட காலஞ்சென்றவரின் மரண சாதனத்தின் நிருபனத்துக்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே முதற் சந்தர்ப்பத்து முற்றுன கட்டளை 1985 ஆடி 19ந் தேதி பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1985 புரட்டாதி 6ம் திகதியாகிய இன்று.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆ. குணநாயகம்,
பதிவாளர்.

தயாரித்தது
K. Packiyalingam
மனுதாரரின் சட்டத்தரணி.
702

## வீடு வளவு விற்பனை

உரும்பராய் தெற்கு,
சிவகுல வீதி.

ஆறு பரப்புக் காணி, அழகான வீடு, அருமையான அயல், அமைதியான சூழல், வற்றுக் கிணறு வாகனசாலை (கருஜ்). இரண்டு மும்முனை மின்சாரம், முக்கால் குதிரை மோட்டர், மா, பலா, தென்னை மற்றும் பல பிரயோஜனம், சூழவர மதில், சோலை எனும் நிழல்.
இக்காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
K. இராஜநாயகம்,
"சந்திரிகை", உரும்பராய். (718)

ST. JOHN'S COLLEGE, JAFFNA

## Old Boys Association- Annual Re-union

SATURDAY 5th OCTOBER, 1985.

PROGRAMME:

7-30 a. m. Holy Communion Service.
9-00 a. m. Breakfast.
10-30 a. m. Annual General Meeting.

D. J. Thevathason,
Hony. Secretary.
(686)

## 31-வது நாள் நினைவஞ்சலி

தில்லையம்பலம் செல்லையா—அரியாலை

16-08-1985-ல் காலமெய்திய எனது தந்தையாரின் மரணச்சடங்கில் எனது அறிவித்தல் கிடைக்காமலேயே பங்குபற்றியவர்கள், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கள் யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 15-09-1985-ல் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

செ. பத்மநாதன்
உதவி காணி ஆணையாளர்,
கச்சேரி,
கிளிநொச்சி.

ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (693)

## நன்றி நவிலலும் தசாக சபிண்டீகரண அழைப்பும்

வை. கலைக்குமார் (கண்ணன்)

[இரத்தோட்டை கோவிலில் சேவையாற்றிய நா. வைத்தீஸ்வரக்குருக்களின் மகன் கண்ணன்]

தோற்றம்:
03-05-1967



மறைவு:
05-09-1985

5-9 1985 வியாழக்கிழமை எனது அன்பு மகனின் சமக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் கேசாவில் பொதுமக்களுக்கும் பத்திரகாளி கோவிலடியைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் பல வழிகளாலும் உதவி செய்து அனுதாபத்தில பங்கு பற்றிய பொதுமக்களுக்கும் உற்றார், உறவினருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் அந்திமக்கிரியைகள் வருமாறு:

14-9-85 சனிக்கிழமை தசாகம்
15-9-85 ஏகோதிஷ்டம், மாசியம்
16-9-85 சபிண்டீகரணம்
17-9-85 கிகஞ்ஞம், சுத்தி, புண்ணியாகம்

மேற்படி நடைபெறவிருக்கின்ற கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு
நா. வைத்தீஸ்வரக்குருக்களும் பாரியாரும்
(பெற்றோர்)
சகோதர சகோதரிகளும்.
கேசாவில் பிள்ளையார் கோவில்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (669)

# 'கே. ஜி. பி.' பிரமுகர் பிரிட்டனில் தஞ்சம்!

## 24 ரஷ்யர்கள் வெளியேற்றம்!

லண்டன், செப் 13

சோவியத் யூனியனின் 'கே. ஜி. பி.' புலனாய்வு ஸ்தாபனத்தைச் சேர்ந்த முக்கிய புள்ளியொருவர் பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ளார் இவர் கொடுத்த தகவல்கள் சிலவற்றையடுத்துப் பிரிட்டனிலிருந்து 25 சோவியத் அதிகாரிகள் நேற்று வெளியேற்றப்பட்டனர். இவர்களில் ஆறு பேர் ராஜதந்திரிகளாவர். இந்த சோவியத் அதிகாரிகள் பிரிட்டனில் உளவாளிகளாகச் செயற்பட்டனர் என்று தெரிய வந்துள்ளது.

திரு. ஒலே கோர்டியொவ்ஸ்கி (வயது 47) என்பவரே பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ள சோவியத் கே. ஜி. பி. அதிகாரியாவார். இவர் இப் புலனாய்வு ஸ்தாபனத்தில் மிக முக்கியபுள்ளியாக இருந்துவந்துள்ளார்.

அத்துடன் கடந்த பத்து வருட காலமாக டென்மார்க்-பிரிட்டன் ஆகிய இரு நாடுகளிலும் இவர் சோவியத் தூதராலயங்களில் கடமையாற்றினார். கே. ஜி. பி யின் பெரும் நம்பிக்கைக்குரியவராக இவர் இருந்தார். ஆயினும் இத்தூதரகங்கள் சோவியத்துடன் கொண்டிருந்த இரகசியத் தொடர்புகளை அவ்வப்போது டென்மார்க்-பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

திரு. கோர்டியொவ்ஸ்கி பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ளமை கே. ஜி. பி யை வெகுவாகப் பாதித்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

இவர் கொடுத்த தகவல்களின்படி பிரிட்டனில் சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த முதலாவது செயலாளர், அத்தூதரகப் பாதுகாவலர் ஒருவர், கார்ச் சாரதி ஒருவர் ஆகியோர் உளவாளிகளாக இருந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த கே. ஜி. பி. பிரமுகர் பிரிட்டனில் தஞ்சமடைந்திருப்பது மேற்குலகுக்கு ஒரு பெரும் புலனாய்வுத்துறை வெற்றி என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். கே. ஜி. பி யின் இரகசிய சேவைகள் மற்றும் ஐரோப்பாவில் அதன் நடவடிக்கைகள் குறித்து இவர் கூடுதல் தகவல்களைத் தரலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனிலுள்ள சோவியத் தூதரகம் இவரின் அரசியல் தஞ்சம் குறித்துக் கருத்து வெளியிடவில்லை. ஆயினும் இதனையடுத்து சோவியத் அதிகாரிகள் பிரிட்டனிலிருந்து வெளியேற்றப்பட்டதை அத்தூதரகம் கண்டித்துள்ளது.

இதே வேளை பிரிட்டனின் இந்த வெளியேற்ற நடவடிக்கைக்குப் பதிலாக சோவியத் யூனியனிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளும் வெளியேற்றப்படலாமென்று கூறப்பட்டது. (இ)

## எல்சல்வடோர் ஜனாதிபதியின் மகள் கடத்தல்!

### நாடுமுழுவதிலும் தீவிர தேடுதல்!!

லண்டன், செப்-13

எல்சல்வடோர் ஜனாதிபதி திரு. டுவாட்டேயின் புதல்வி கடந்த செவ்வாய்க்கிழமை கடத்திச்செல்லப்பட்டார் இவரைத் தேடும் பணிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தக் கடத்தல் தொடர்பாக எல்சல்வடோரில் இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எல்சல்வடோரின் தலைநகரான சன்சல்வடோருக்குச் சென்றுகொண்டிருந்த போது திரு டுவாட்டேயின் மகள் இனந்தெரியாதவர்களால் அவரது காரில்வைத்துக் கடத்திச் செல்லப்பட்டார்.

நேற்று சல்வடோர் ஜனாதிபதியின் இல்லத்திற்கு அருகில் உள்ள வீடொன்றிலும் பலத்த தேடுதல் நடத்தப்பட்டது. அப்போது அங்கிருந்தும் ரைபிள் துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. இந்த வீட்டிலும் டுவாட்டேயின் மகள் வைக்கப்பட்டிருந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

## வளைகுடாவில் பெரும் எண்ணெய்க் கசிவு!

லண்டன், செப் 13

மத்தியகிழக்கு வளைகுடாப் பகுதியில் பெருவளவு எண்ணெய்க்கசிவு கடலில் ஏற்பட்டுள்ளது. இக்கசிவு சுமார் 56 கிலோ மீட்டர்கள் தூரத்துக்கு கடலில் பரந்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானின் 'கார்க்தீவு' எண்ணெய் சேகரிப்பு வலயத்தில் எண்ணெய்த்தாங்கிக் கப்பலொன்று ஈராக்கின் போர் விமானமொன்றினால் தாக்கப்பட்டது இதனையடுத்தே இக்கசிவு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது

இக்கசிவு காரணமாக வளைகுடா கப்பல்சேவை பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. ஓமான், சவுதிஅரபியா, கட்டார் போன்ற நாடுகள் இந்த எண்ணெய்க்கசிவு குறித்து ஆராய்ந்துவருகின்றன. இக்கசிவு மூலம் கடல் நீர் அசுத்தமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இருவருடங்களுக்கு முன்னரும் இது போன்ற பெரும் கசிவு வளைகுடாவில் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## உலகச் செய்திகள்

## "வன்செயல் நிறுத்தப்படா விட்டால் சமரச பேச்சுக்களில் நம்பிக்கை இல்லை!"

### சந்திரகாசன் கருத்து

(புதுடில்லி)

"இலங்கையில், அப்பாவித் தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தப்படடுவரும் வன்செயல்கள் நிறுத்தப்படாவிட்டால், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் வாய்ப்புகள் மிகக்குறைவாகவே இருக்கும்."

தமிழீழத்தவர்களில் ஒருவரான எஸ் சி சந்திரகாசன் தெரிவித்தார்.

"பேச்சு வார்த்தைகளின் வெற்றியில் தமக்கு எப்போதும் நம்பிக்கை இருந்ததில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன் தினம் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

## பிரான்ஸில் சீனர்கள் சட்டவிரோத குடியேற்றம்!

பாரிஸ், செப். 13

சீனாவிலிருந்து சட்டவிரோதமாகப்பலர் பிரான்சுக்குள்குடியேறத் தொடங்கியுள்ளனர் என்று பிரெஞ்சு குடிபகல்வு-குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 தினங்களில் 30 சீன மக்கள் இவ்வாறு குடியேறியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இவர்கள் கிழக்கு சீனாவிலிருந்தே வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடம் போலியான குடியேற்ற தஸ்தாவேஜுக்களும் ஏனைய பத்திரங்களும் இருக்கக் காணப்பட்டன என்று கூறப்பட்டன

இவர்களுக்கான விமானப் பயணச் சீட்டுக்கள் பிரான்ஸில் கொள்வனவு செய்யப்பட்டு சீனாவுக்கும், ஹொங்கொங்கிற்கும் அனுப்பபபட்டுள்ளது பின்னர் அங்கிருந்தே இவர்கள் விமானங்களில் பிரான்ஸ் வந்தனர்.

இச்சீனர்கள் பிரான்ஸில் குடியேறலாம் என ஏமாற்றப்பட்டுள்ளனரென்றும், இவர்களைபல போலிமுகவர்கள் ஏமாற்றிபணம் சம்பாதித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இம் முகவர்களின் விபரங்கள்கண்டுபிடிக்கப்படவில்லை, அத்துடன் பிரான்ஸிலுள்ள இச்சீனர்கள் குறித்து எதுவிதமுடிவும் எடுக்கப்படவில்லை. (இ)

## புதுவித தண்டனை

(யாழ்ப்பாணம்)

இருபெண்களும், ஒரு இளைஞனும், மொட்டை அடிக்கப்பட்ட நிலையில் யாழ் நகரின் தியேட்டர் ஒன்றுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்,

இவர்கள் துர்நடத்தையில் ஈடுபட்டதாகக்குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## சமரசப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க பகீரதப்பிரயத்தனம்

(லண்டன்)

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு புதிய முயற்சிகள் உயர்மட்டத்தில் புதுடில்லியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது

இலங்கை அரசு தயாரித்துள்ள புதிய திட்டங்கள்பற்றி கலந்துரையாடுவதற்கென தமிழ்க் குழுக்களை டில்லிக்கு வரும்படி இந்திய அரசு அறிவித்துள்ளதென்றும், இலங்கை அரசு கடந்த மாதம் முன்வைத்த புதிய திட்டத்தின் கீழ் தமிழர்கள் பெரும்பாலும் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓரளவு தன்னாட்சி வழங்க இலங்கை அரசு முன்வந்துள்ளதாகவும் லண்டன் பி பி ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

சமரசப் பேச்சுக்களை மீண்டுந் தொடங்கும் நம்பிக்கையில் இலங்கை அரசின் குழுவொன்று இப்பொழுது புதுடில்லியில் இருக்கிறது அதே நேரத்தில் பேச்சுவார்த்தைகள் எப்போது தொடங்கும் என்பதுபற்றியும், புதிய திட்டங்களைப்பற்றிக் கலந்துரையாடத் தமிழ்க் குழுக்கள் புதுடில்லிக்கு எப்பொழுது வருமென்பதுபற்றியும் நிச்சயமாக எதுவும் தெரிவிக்க முடியாமலிருக்கின்றது

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்செயல்கள் நிறுத்தப்பட்டால்தான் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். இல்லையானால் இப்பேச்சுக்களில் தமிழ்க் குழுக்கள் கலந்து கொள்ளமாட்டாது. (து

## தேனும்பேட்டையில் 1300 குடிசைகள் தீக்கிரை!

சென்னை, செப்-13

சென்னை தேனும்பேட்டையில் நேற்றுப் பெருந் தீவிபத்து ஏற்பட்டது. இதில் 1300 குடிசைகள் எரிந்து சாம்பராயின. இதனால் சுமார் 3000 பேர் பாதிக்கப்பட்டனர்.

'காஸ் சிலிண்டர்' ஒன்று வெடித்துத் தீப்பற்றியதே இவ் விபத்திற்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது விபத்து ஏற்பட்டதும் தீயணைப்புப் படையினர் ஸ்தலத்திற்குவிரைந்து தீயைக் கட்டுப்படுத்தினர்

மாநில தொழில்துறை அமைச்சர் விபத்து நிகழ்ந்த இடத்தைச் சென்று பார்வையிட்டார். இதேவேளை கடந்த ஆண்டு சென்னை "மூர் மார்க்கெட்' தீவிபத்தில் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு இந்தியப் பிரதமர் நிதியிலிருந்து நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 10 லட்சம் ரூபா இந்த நஷ்டஈட்டுத் தொகையாக வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## உலக சேவைதினம்

(யாழ்ப்பாணம்)

உலக சேவை தினம் எதிர் வரும் அக்டோபர் 8-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது.

உலகெங்கிலுமுள்ள லயன்ஸ் கழகங்கள் கொண்டாடும்உலக சேவை தினத்தை யொட்டி இலவசவைத்திய சிகிச்சைகள் கண்பரிசோதனை முகாம்கள், மரம்நடுகை உட்பட பல்வேறு நடவடிக்கைகள் லயன்ஸ் கழகங்களால் மேற்கொள்ளப்படவிருப்பதாக வலயத்தலைவர் லயன் டாக்டர் ரி. பகீரதன் தெரிவித்துள்ளார்.

உலகிலுள்ள மொத்தம் 36,000 லயன்ஸ் கழகங்களும் உலகசேவை தினத்தை சிறப்பாக கொண்டாட விருப்பது குறிப்பிடத்தக்கது. (ச)

**மணிவாக்கு**

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி—கிளியே!
ஆறுமுகன் தஞ்சமடி;

—சிவயோக சுவாமிகள்.

# நமது நோக்கு

## கிரிக்கட் வெற்றி உதைபந்து தோல்வி

ஒருசிறு நாட்டின் சிற்றரசன் ஆங்கிலேயருக்கு சொந்தமான கிரிக்கட்டை அவர்களிலும் பார்க்கத் திறம்பட விளையாடி உலகப் புகழ் பெற்றானே?

அக்காலத்தில் இந்தியாவில் நவநகருக்கு அரசனான ஜாம்சாகிப் இங்கிலாந்தின் பிரபல மைதானத்தில் ஆடிய கிரிக்கட் ஆட்டம் பற்றிய விமர்சனம் இது.

இலங்கை, பாருக்குள்ளே நல்ல நாடென்று பாரதி பாடிய பரந்த பாரதத்தை டெஸ்ட்போட்டியில் தோற்கடித்தமை பெரும் பாராட்டுக்குரியது. நாட்டுக்கு ஒரு விடுமுறையும் நல்லூர் தேருக்கு அது வாய்ப்பானதும் தெய்வத்தின் திருவிளையாடல் போலும்.

நேர்மை, ஆண்மை, பொறுமை என்னும் முக்கனி பிழிந்த பழச்சுவையே கிரிக்கட். வெற்றியில் பொறுமை, பணிவென்றும் சொல்லலாம், தோல்வியில் ஆண்மை, எதிலும் நேர்மை; உண்மையில் ஆங்கிலேயரின் அதிசயக் கண்டுபிடிப்பு இது.

ஐரோப்பிய, அமெரிக்க, ரஷ்ய நாடுகள் இதனை விரும்பி விளையாடாது போனதேன் என்ன?

ஆங்கில மொழி, பாராளுமன்ற ஆட்சிமுறை, கிரிக்கட்-என்ற மூன்று கொடைகள் என்றும் நின்று நிலவும் என்பது சர்ச்சைக்குரியது; ஆனால் ஷேக்ஸ்பியரும் கிரிக்கட்டும் நாகரிக மக்கள் மத்தியில் பரவுமென்று நம்பலாம்.

"வெற்றி தோல்வி எதுவானாலும் விதானங்களுக்கமைய விளையாடு" இதுவே கிரிக்கட் விளையாட்டின் முக்கிய கோட்பாடு; எனவே விதிகளைவிழிப்புடன் செயற்படுத்தும் பொறுப்புடைய மத்தியஸ்தரின் பங்கு இந்த விளையாட்டின் புனிதத்தைப் பேணுவதில் நிறைவடைகின்றது.

அது எப்படி?(How's that?) என்ற வினா எழுமானால் மத்தியஸ்தர் நிலைப்படைந்து தவறுகளை நீக்க வழிபிறக்கும்.

இத்தனை கட்டுப்பாடுகளைக் கொண்ட இந்த நுண்கலை பல மணித்தியாலங்களுக்கு நாட்கணக்காகவும் பரந்த தேசத்தில் ஆடப்படுவதால் ஒரு குட்டிப் 'போர்' என்று சொல்வது பொருத்தமானது.

விதிகள் மிக நறுக்காகப் பேணப்பட்டால் 'போரில்' வெற்றி தோல்வி அர்த்தமுள்ள முடிவென்பதில் ஐயமில்லை.

எனவே இலங்கைக் கிரிக்கட் அணிக்குக் கிடைத்த வெற்றி மகத்தானது.

இதற்கு நேர்மாறாக நடைபெற்ற முக்கிரிகல 'உதைபந்தாட்டம்' எந்த விதானங்களையும் பேணியதாகத் தெரியவில்லை.

இந்த உபதேர்தலில் ஏற்பட்ட பயங்கர மோதலில் அரசியற் பிரமுகர்கள் உட்படப் பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகச் செய்தி.

அது மட்டுமா? மோதல்கள் பயங்கரநிலை அடைந்த போது பலர் கொல்லப்பட்டதாகவும் அஞ்சப்படுகிறது. இதற்கு நேற்று ஆரம்பித்த ஊரடங்குச் சட்டம் இன்று காலைவரை நீடிக்கப்பட்டது ஒரு சான்றாகலாம்.

தேர்தலின்பின் குறிப்பிட்ட மாவட்டத்தில் 24 மணிநேர ஊரடங்கு என்றால், தேர்தல் உக்கிரமடைந்த நேரத்தில் நிலைமை எவ்வாறிருக்கும்? யாழ்ப்பாணத்தில் 1981-ல் நடந்த மாவட்டத் தேர்தல் நினைவுக்கு வருவது இயற்கை

இதனை உதைபந்தாட்டமென்று சொல்வது மிகப் பொருத்தமானது. உதைபந்தாட்டம் விதிகளுக்கமையாத விளையாட்டல்லவென்பது எவருக்கும் தெரியும்

இன்று அமெரிக்காவில், பிரிட்டனில், ஐரோப்பாவில், சீனாவில் உதைபந்தாட்டச் சாம்பியன் கிண்ணத்துக்குப் போட்டி போடும் கோஷ்டிகள் எழுப்பும் போட்டி மனப்பான்மை பார்வையாளர் பலரின் உயிரைக் குடித்திருப்பது சர்வதேச சம்பவங்களில் மிகப் பயங்கரமான நிகழ்ச்சிகள்.

இது உதைபந்தாட்டத்தின் இன்றைய வரலாறு என்றால் நாம் இதனை வேறொரு முறையில் நோக்குகின்றோம்.

முன்பு பலமுறை குறிப்பிட்டதுபோல சுதந்திரத்துக்குப் பின் இந்த நாட்டின் ஆட்சிக்கு வந்த கட்சிகள் அனைத்தும் தமிழர் பிரச்னையை உதைபந்தாகக் கொண்டது. அதனை உருட்டி உதைத்து யார் கோல் போடுவதென்ற போட்டியில் வெற்றிபெற்றவரே ஆட்சிக்கு அடுத்தடுத்து வந்தனர்.

எந்த விதானங்களுக்கும் அமையாத விளையாட்டு இது. இதில் பங்குபற்றிய கட்சிகள் அனைத்தும் தோல்விகண்டன.

உதைபந்து கிழிந்து போகும் தறுவாயில் விளையாட்டின் விளைவு நாடனைத்தையும் கலக்கிச் சேறுக்கி விட்டிருக்கிறது!

ஒரு பாழடைந்த கிணறு போன்ற நிலையிலிருக்கும் நாட்டுக்கு விமோசனம் உண்டானால், கிரிக்கட், உதைபந்து போன்ற விளையாட்டுக்களைத் தற்காலிகமாக நிறுத்தி மக்களைப் பாதுகாக்க, குறிப்பாகத் தமிழரைப் பாதுகாக்கப் பக்கம் சார்பற்ற படையே பிரதானம்.

### அலங்காரத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் அலங்காரத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## வட இல. தனியார் மருத்துவக் கல்லூரி

## யாழ். மருத்துவசங்கக் கருத்து

மருத்துவக் கல்வியை விரிவுபடுத்துவதை தனது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக யாழ். மருத்துவசங்கம் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் புதிதாக ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதை யாழ். மருத்துவசங்கம் வரவேற்கிறது. இது மருத்துவ அறிவு வளர்ச்சிக்கும், நோயாளிகளுக்கு நன்மைபயக்கும் விதத்திலும்சமுதாயநலனைப்பாதுகாக்கும் விதத்திலும் அமையுமானால் அத்தகைய ஒரு முயற்சிக்கு நாம் ஆதரவு வழங்க தயங்கமாட்டோம். இத்தகைய முயற்சியில் குறைபாடுகள் காணுமிடத்து அவற்றை எடுத்துச் சொல்வதையும் எமது கடமையாகக் கருதுகின்றோம். இதனால்தான் சிலகாலத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்று வைத்திய கல்விக்காக மாணவர்களைச் சேர்க்கும்பொழுது அதில் உள்ள குறைபாடுகளை எடுத்துரைத்தோம்.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவக்கல்லூரி ஒன்று ஆரம்பிப்பதுபற்றிய பத்திரிகை விளம்பரங்களையும் விமர்சனங்களையும் பார்த்திருப்பீர்கள். யாழ். மருத்துவ சங்கத்திற்கும் இதை ஆரம்பிக்கும் நிறுவனத்திற்கும் எதுவித தொடர்பும்

# மக்கள் கருத்து

இல்லை. பத்திரிகை விளம்பரங்களைப் பார்த்ததும் இந்த நிறுவனத்திடம் அரசாங்க அங்கீகாரம், கட்டிடங்கள். உபகரணங்கள், போதனா வைத்தியசாலை, உத்தியோகத்தர்கள் என்பனபற்றிய சில விபரங்களைக் கோரி இருந்தோம். எமது கோரிக்கைகளிற்கு திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை

அண்மையில் நடந்த யாழ். மருத்துவ சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இதுபற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது இதன் முடிவில் மருத்துவக் கல்லூரி ஒன்றிற்கு இருக்க வேண்டிய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும்விதத்தில் இக்கல்லூரி அமைந்துள்ளதா என்பதைப் பெற்றோரும், மாணவர்களும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை இப்பகுதியில் வாழும் மக்களுக்கு எடுத்துச் சொல்வது எமது கடமை எனக் கருதி கீழ்க்குறிப்பிட்ட சில முக்கிய கருத்துக்களைத் தெரியப்படுத்துகின்றோம்:

1. மருத்துவக் கல்லூரி உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதா என்றும், பட்டச்சான்றிதழ் வழங்குவதற்கு தகைமை பெற்றதா என்பதையும் ஏதாவது சர்வகலாசாலையுடன் இணைக்கப் பட்டதா என்பதனையும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. இத்தகைய நிறுவனத்திற்கு விரிவுரை மண்டபங்கள், வைத்தியசாலை வசதிகள், ஆய்வுகூட வசதிகள். நூல் நிலையம், நிர்வாக அலுவலகம் என்பன உண்டா என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. மருத்துவக் கல்வியைப் போதிப்பதற்கு உகந்தபோதிய தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்கள் உண்டா என்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. போதனா வைத்தியசாலை, சத்திரசிகிச்சை உட்பட போதியளவு சிறப்பு வைத்தியர்களையும், பலதரப்பட்ட போதிய அளவு நோயாளிகளையும் கொண்டதாக இருப்பது மிக அவசியமாகும்.

இந்தத் தேவையை ஒரு சிறிய வைத்தியசாலையினால் நிறைவு செய்ய முடியாது என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

கௌரவ செயலாளர்,
யாழ்ப்பாணம் மருத்துவ சங்கம்

### நல்லைநகர்ச் செல்வனே

அன்பருக்கு அன்பனே! நல்லைநகர்க் கந்தனே
ஆறுதலைத் தருபவனே! ஆறுமுகனே!
இகபரசுகம் அருள்பவனே! நல்லைநகர் வேலனே!
ஈசனுக்குபதேசித்தோனே! சுவாமிநாதனே!
உமைபாலனே! நல்லைநகர்க் குகனே!
ஊழ்வினை அறுப்பவனே! சிவபாலகனே!
எங்கும் நிறைந்தவனே! நல்லைநகர்ச் செல்வனே
ஏழுலகம் ஆள்பவனே! வள்ளிமணாளனே!
ஐங்கரனின் சோதரனே! நல்லைநகர்க் குமரனே!
ஒளியாய் இருப்பவனே! கார்த்திகேயனே!
ஓங்காரமானவனே! நல்லைநகர்க் கந்தனே!
ஔவைக்கருள் புரிந்தவனே! எமைக்-
காத்திடுவாய்!

ச. கு. க. கௌரி

★ ★ ★

### சேவல் கொடியோனே வேல் முருகா

சங்கரன் மைந்தனே சரவணனே
சரணடைந்தோம் உன்பாதம் சண்முகனே
சாதி மத பேதமின்றி ஒற்றுமையாய்
சாது காந்தி வழி நடக்க அருள்புரிவாய்

சித்தம் கலங்கி நாம் நிற்கையிலே
சிரித்தமுகம் காட்டி எம்மைக் காத்திடுவாய்
சீதேவி இலக்குமியின் மருகோனே நாம்
சீலம் நிறைந்து வாழ அருள்புரிவாய்

சோதியாய் எங்கும் நிறைந்தவனே எம்
சோதனைகள் தீர்க்கவல்ல சுந்தரனே
சௌந்தர்யம் மிகு தோற்றம் உடையவனே
சௌபாக்கியம் அளிப்பவனே வேல்முருகா

செல்வி. மா ஜமுனா

★ ★ ★

### எம் குரல் கேட்கவில்லையோ!

ஈராறுசெவிகளில் நான்சொன்ன வார்த்தைகள்
எள்ளளவும் கேட்கவில்லையோ
இப்புவியில் நீயலால் வேறுதுணை காண்கிலேன்
இன்பமயமான முருகா
இரந்துதரும் அடியவர்கள் நெடுந்துயர் களைந்திட
இசையாத விந்தையென்ன
ஈசனுக்குபதேசம் செய்த குணநாதனே
இணையிலா அருட்சோதியே
கூர்கொண்ட வேல்கொண்டு சூரனைமாய்த்திட்டுக்
குஞ்சரியை மணந்தபின்பு
குறமாது வள்ளியையும் மறவாது ஆட்கொண்டு
குன்றினில் அமர்ந்த குமரா
சோர்வுற்றுத் துணையற்றுத் துன்புறும்
எமைக்காக்கத்
துதிசெய்து அடிபணிந்தோம்
சீர்பெற்ற நல்லையில் அன்பர்க்கருள்தரும்
சின்மயானந்த குருவே!

தி. மார்க்கண்டு

★ ★ ★

### நல்லையிலே நீயிருக்கப் பயமேன்

கன்னிரு விழிகளிலே என்னையும் ஓர்கடைக்கண்
பார்த்தருள வேணுமையா முருகையா- எந்தன்
முன்னைசூழ் வினைகளிலே என்னையே நானறியா
தன்மையும் நீயறிவாய் முருகையா

நல்லையிலே நீயிருக்க நரசுரர் சுற்றிவந்து
தொல்லையெல்லாம் தருவதென்ன முருகையா- தமிழ்
எல்லையெல்லாம் உனதுமக்கள் எந்தர்களின்
தொல்லையினால்
அல்லற்படக் காரணமேன் சொல்லையா.

சித்தமது நீயிரங்கி எந்தர்களை வேரறுத்து
வெற்றிதர வேணுமையா முருகையா உந்தன்
பக்தர்களுக் கருளுகின்ற அத்தருணம் எனக்குமருள்
பாலித்திட வேணுமையா- முருகையா

க. பூபாலபிள்ளை

★ ★ ★

### நாடித்தொழுதிடுவீர்

நல்லைநகர்க்கந்தன் நற்றாள் தொழுபவர்க்கே
அல்லலெல்லாம் நீங்கும் ஆக்கமெலாம் வந்தெய்தும்
எல்லையிலாப் பேரின்பம் என்னும் நிலை கூடும்
நல்லுள்ளம் கொண்டீரே நாடித் தொழுவீரே

— அ. நாகராஜா

### மல்லாகம் பழம் பிள்ளையார் இன்று தீர்த்தம்

## அல்லல் நீக்கி ஆளுமையா

முருகனுக்கு முன்வந்த பிள்ளையே
மூடிக வாகனா மூலாதாரமே
ஒருவரும் உணரா ஓங்காரப் பொருளே
ஒற்றை மருப்பு உடையோனே
கருதரிய கன்னை நீக்கி காத்த கணபதியே
கருதுவார் மனதுறை கற்பகமே
பெருகு புகழ் மல்லாகப் பெரும்பேற பேணுவார்
அல்லல் நீக்கி ஆளுமையா

— சிவநெறிச்செல்வர்
சிவசண்முகவடிவேல்.

---

### யாழ். மாவட்ட

# சிரேஷ்ட பாடசாலைகளில் 'ஆண்டு 7' தொடர்ந்தியங்கும்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு (1986) ஜனவரி தொடக்கம் மூன்று வருட காலத்தில் ஆரம்பப் பாடசாலைகளில் 'ஆண்டு 7' (தற்போதைய 6-ம் தரம்) ஆரம்பிக்கவும் சில சிரேஷ்ட பாடசாலைகளில் 'ஆண்டு 7'ஐ நீக்கவும் ஆலோசிக்கப்பட்டிருந்த திட்டத்தில் மாற்றம் செய்யப் போவதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை தெரிவிக்கிறார்.

சகல வட்டாரக்கல்வி அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில் இம் மாற்றம் பற்றிக் கூறப்பட்டிருப்பதாவது:-

''தற்சமயம் 5-ம் தரம் மட்டுமே உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு ஜனவரியில் (6-ம் தரம்) '7-ம் ஆண்டு' வகுப்புகளை ஆரம்பிக்கவும், தற்போது (6-ம் தரத்திலிருந்து சிரேஷ்ட பாடசாலைகளாக இயங்குவனவற்றில் (6-ம் தர) '7-ம் ஆண்டு' வகுப்பை நீக்கவும் ஆலோசிக்கப்பட்ட திட்டம் சில வசதியீனங்களால் தற்காலிகமாகப் பின்போடப்பட்டுள்ளது. ஆயினும் கட்டிட வசதி, தளபாட வசதி உள்ள ஆரம்பப்பாடசாலைகளில் அதிபர்கள் விரும்பினால் '7-ம் ஆண்டு' வகுப்புக்களைப் பணிப்பாளர் அனுமதியுடன் ஏற்படுத்தலாம்.

''இதே போன்று தற்போது (6-ம் தரம்)'7-ம் ஆண்டு' வகுப்புகளை கொண்ட சிரேஷ்ட பாடசாலைகள் தமது வகுப்புகளைத் தொடர்ந்து நடாத்தலாம்''

யாழ்ப்பாணக் கல்வி மாவட்டத்தில் 255 ஆரம்பப் பாடசாலைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

# தாவடி விழிப்புக்குழு ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(மானிப்பாய்)

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருந்தவரும், தமிழ் இளைஞரை விடுதலைசெய்யக்கோரி தாவடி விழிப்புக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான யுவதிகள், இளைஞர்கள் சிறுவர்கள், முதியவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் காலை தாவடி விழிப்புக்குழு நிலையத்தில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம், யாழ் பல்கலைக்கழகத்தைச் சென்றடைந்து பின்னர் திருநெல்வேலியிலுள்ள உதவி அரசாங்க அதிபரிடமும் அரசாங்கத்திடமும் சமர்ப்பிக்குமாறு ஒரு மகஜரை கையளித்தது.

வெலிக்கடைச் சிறையில் தாங்கொணாத் துயரத்துக்குள்ளாகிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞரை உடன் விடுவிக்குமாறு இந்த மகஜரில் கோரப்பட்டது

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உண்ணாவிரதமிருந்து வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இந்த ஊர்வலத்தில் சென்றவர்கள் ஒரு மணிநேரம் அவர்களுடன் அமர்ந்தனர்.

---

## ஜனார்த்தனன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் தெரிவித்துள்ளார்.

இந்த வெளியேற்ற நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் நேற்று கடைகள்யாவும் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். ராமச்சந்திரன் செய்தியாளர் மத்தியில் பேசுகையில், "சமரசப் பேச்சுவார்த்தைகள் தொடரப்பட்டு இணக்கமான அரசியல் தீர்வு ஏற்பட அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட தமிழ்த் தீவிரவாத உறுப்பினர்களான திரு எஸ். ஏ. பாலசிங்கமும், சட்டத்தரணி எஸ். சத்தியேந்திராவும் மீண்டும் இந்தியாவுக்கு வரவிரும்பினால் மத்திய அரசு அனுமதியளிக்க வேண்டும் என்றும் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்கள் நேற்று ஒரு மனதாகக் கேட்டுக் கொண்டனர்.

இன்று காலை 10 மணிக்கு இந்த மாநாடு மீண்டும் நடைபெறும்.

---

## இன்று 3 – வது கிரிக்கெட் டெஸ்ட்

(கொழும்பு)

இலங்கை- இந்திய கிரிக்கெட் கோஷ்டிகளுக்கிடையிலான 3-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட்போட்டி, இன்று கண்டி ''அஸ்கிரிய'' விளையாட்டு மைதானத்தில் காலை 10-05 க்கு ஆரம்பமாகின்றது.

இலங்கைக் கோஷ்டிக்கு துலீப்மெண்டிஸும், இந்திய கோஷ்டிக்கு வீரர் கபில் தேவும் தலைமை தாங்குகின்றார்கள்.

இலங்கைக் கோஷ்டிக்கு 2-வது டெஸ்டில் வெற்றிபெறும் போது இக்கோஷ்டியில் அங்கம் வகித்த அதே வீரர்களே 3- வது டெஸ்டிலும் அங்கம் வகிப்பார்கள் என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின், தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

இந்தியக் கோஷ்டியில் வீரர் ரொஜர்பினி புதிதாக இடம் பெறலாமென கூறப்படுகின்றது.

3- வது டெஸ்ட்போட்டி இரு கோஷ்டிகளுக்குமிடையே பலத்த பரீட்சையாக இருக்குமென கிரிக்கெட் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள். (வி)

---

# இப்படியும் நடக்கிறது

தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர்கள் பதவிக்கு சில மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தபோது, முந்தியடித்துக்கொண்டு ஏராளமானவர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

ஆனால் சந்தர்ப்பம் கிடைத்ததோ சிலருக்குத்தான். அந்தச் சிலரில் 'இவரின்' கதை தனி முத்திரைபெறுகிறது!

அவர் பெயர் ஈஸ்வரபாதம். வடக்கைச் சேர்ந்தவர்.

குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பித்து. எழுத்து, நேர்முகம் போன்ற சகல பரீட்சைகளிலும் வெற்றிபெற்ற அவருக்கு; மூன்று வாரகால சேவை முன் பயிற்சிக்கு அழைப்பு வருகிறது. பயிற்சி பெறவேண்டிய இடம்; நீர்கொழும்பிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரி.

காலம், நேரம், இடம் பற்றி அதிகம் சிந்திக்காமல் ஓடுகிறார் நீர்கொழும்புக்கு.

''சேவை முன்காலப் பயிற்சிக்கு நீர் தெரிவுசெய்யப்பட்டது சரிதான் ஆனால் உம்மை இங்கு அனுமதிக்க முடியாது...'' கல்லூரி அதிபர் சீறிவிழுகின்றார்! ஆனால் காரணம்......?

விபரம் புரியாத 'நமது கதாநாயகன்' கொழும்புக்குச்சென்று அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து தமது நிலையை விளக்குகின்றார்.

''உம்மிடம் எல்லாத் தகைமைகளும் உண்டு: நீர் மீண்டும் நீர்கொழும்பு சென்று பயிற்சி பெறலாம்......'' என்று அமைச்சு உயர் அதிகாரி ஒருவர் அவருக்கு ஆறுதல் கூறி, அமைச்சின் எழுத்துமூலமான விசேட பணிப்புரையை வழங்கினார்.

'கதாநாயகன்' மீண்டும் பயிற்சிக்கல்லூரி செல்கிறார். அதிபரிடம் பணிப்புரையை வழங்குகின்றார். அரைமனமும் குறைமனமுமாக அந்த உத்தரவைப் பெற்று, பயிற்சிக்கு அனுமதி அளிக்கின்றார்.

இருபது நாட்கள் பயிற்சி நடக்கிறது. பயிற்சியின் முடிவில், சான்றிதழ் வழங்கும் வைபவம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெறுகிறது. நமது 'கதாநாயகன்' தமது சான்றிதழை எதிர்பார்த்து உற்சாகத்துடன காத்துநிற்கின்றார்.

என்ன அநியாயம்! பயிற்சி முடித்த அனைவருக்கும் கையளிக்கப்பட்ட சான்றிதழ் இவருக்கு வழங்கப்படவில்லை! என்ன காரணம்?

பரிபூரணமான கழுத்தறுப்பு!

ஏமாற்றத்தைத் தாங்கமுடியாத நம்மவர்... வெறுங்கையுடன் வீடு திரும்பினார்!

அந்தப் பயிற்சிக் கல்லூரி அதிபரின் சீற்றத்துக்கு என்ன காரணம் தெரியுமா?

அவர் வலது குறைந்தவர்: அதாவது...'போலியோ' வினால் பாதிக்கப்பட்டவர்.

வலது குறைந்தோருக்கு உதவி செய்வதாக வாய் கிழியக் கத்தும் அரசுகள் வாழ்க!

— ஊடுருவி

---

## இனப் பிரச்னை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லட்சம் தமிழ்மக்களும் கௌரவத்துடனும் கண்ணியத்துடனும் இலங்கை சென்று வாழும் நிலை விரைவில் ஏற்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## முல்கிரி...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிபெற்றுள்ளது.

ஐ. தே. க. வேட்பாளர் திரு. ஆனந்தகுலரத்ன 26 037 வாக்குகளைப் பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீ. ல. சு. க வேட்பாளர் ஷமால் ராஜபக்ஷ 24,708 வாக்குகளைப் பெற்றார்.

இத்தேர்தலில் ஆறு சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்கள் அனைவரும் தமது கட்டுப்பணத்தை இழந்துள்ளன.

சுயேச்சை வேட்பாளர்கள் விபரம் வருமாறு; ஜி அபே குணவர்த்தன 593, சாந்தஸ்ரீ 236, குணதாசா 121 குலரத்ன 204, அமரசிங்க 136 ராஜபக்ஷ 84

## இலங்கை...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டும் என்று இலங்கைஅரசு மனப்பூர்வமாக விரும்பினால் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளை ஓரளவாவது ஏற்றுக்கொண்டிருக்கும். ஆனால் இலங்கை அரசு தயாரித்தஇந்த யோசனைகளில் இவ்வாறான தமிழரின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை'' என்று தெரிவித்தார்.

## நல்லூர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எடுத்தவண்ணம் தத்தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றிய அடியார்களது பக்தி உணர்வினையும் ஈடுபாட்டினையும் நேற்றைய தேர் உற்சவம் எடுத்துக் காட்டியது

இன்று அதிகாலை தீர்த்தோற்சவம் நடை பெறுகின்றது.

தேர். தீர்த்த உற்சவங்கள் குறித்த நேர்முகவர்ணனை வானொலியில் இடம் பெறுவது குறித்து தமிழ் மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (நா

---

## ராணுவ அதிகாரி சுட்டுக்கொண்டு மரணம்!

(அனுராதபுரம்)

அனுராதபுரம் சாலியபுர ராணுவ முகாமைச் சேர்ந்த ராணுவ அதிகாரி ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மரணமாகியுள்ளார்.

டி. கே. செனவிரத்ன என்ற பெயரைக் கொண்ட இவர் ராணுவத்தில் சார்ஜன்ட் மேஜர் பதவியில் இருந்தவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் இவரது மரணம் பற்றிய விசாரணை நடைபெறவிருக்கிறது.

## அலங்காரத்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

காலை 9 மணிக்கு நாதஸ்வரக் கச்சேரியும், 10 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனையும், 10-30 மணிக்கு சமய சொற்பொழிவுகளும், 12 மணிக்கு ஸ்ரீ ரங்கநாதப்பெருமான் வீதி உலாவும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாலை நேர நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

---

# பாலசிங்கம் வெளியேற்றத்துக்கு பொதுநலக் காரணமே அடிப்படை!

### இந்திய அதிகாரி தகவல்

(சென்னை)

'பொதுநலக் காரணங்களின் அடிப்படையிலேயே டாக்டர் ஏ. எஸ் பாலசிங்கம் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். இக்காரணங்கள் நீடிக்கும்வரை அவர் மீண்டும் இந்தியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்'

இத்தகவலை இந்திய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் நேற்றுமுன் தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''டாக்டர் ஏ. எஸ். பாலசிங்கத்தை இந்தியாவிலிருந்து வெளியேற்றியமைக்கான காரணத்தை வெளியிட முடியாது. பொதுநலக் காரணங்கள் சிலவற்றை முன்னிட்டே அவர் வெளியேற்றப்பட்டார்''

சமரசப் பேச்சுக்கள் குறித்து அப்பேச்சாளர் கூறியதாவது:-

''இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக் குழுவான ஈழம் தேசிய விடுதலை முன்னணியிடம் இலங்கைப் பிரச்னைக்கான தீர்வை விளக்கும் செயல் திட்ட யோசனை விரிவாக விளக்கப்படும். இதற்காகப் பிரதமர் ராஜீவ்காந்தி ஈ. தே. வி. முன்னணியினரை புதுடில்லியில் எதிர்பார்த்திருக்கிறார்.

இம் முன்னணியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் இச்சந்திப்பில் கலந்து கொள்ள வேண்டும் அல்லது இவர் சார்பில் எவராவது கலந்து கொள்ள வேண்டும்.''

(கி)

## கரூரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்கப்பட்டுள்ள வெளியேற்ற உத்தரவை வாபஸ் பெறுமாறு கோரி நேற்று கரூர் கலைக்கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினார்கள்.

---


## கடைசி நேர வரிவிளம்பரம்

### காணவில்லை

எமது மணமாங்கல்ய ஆபரணமாகிய தாலியும் கொடியும் நல்லூர் முருகன் தேர் உற்சவத்தின்போது தவறிவிட்டது இதை கண்டெடுத்த அன்பர்கள் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செல்வம்ஸ் பற்றிக்கடை, 443, K. K. S றோட், யாழ்ப்பாணம். 727

தர்மலிங்கம் ஜெயராணி சத்திரந்தை, களபூமி காரைநகர் 13-09-85-ல் நல்லூர் கோவிலில் காணாமல் போய்விட்டார் வயது 7, பொது நிறம் வெள்ளை நிறத்தில் ஆரஞ்சு நிற பூப்போட்ட சட்டை அணிந்திருந்தா. தகவல் தரும் விலாசம் திருமதி பாலசுப்பிரமணியம் 80, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம், 726

# இன்றைய பலன்

மாதம்- ஆவணி
திகதி- 29 (1985-9-14)
கிழமை- சனி
திதி- அமாவாசை பின்இரவுவரை
நக்ஷத்திரம்- பூரம் முன் இரவுவரை

மேடம்- பிதாவழி தனவரவிற்குமிடமுண்டாம். மனம் போல் வாழ்வும் இன்றுதொழிலாளர்களிடத்திலும் ஆதரவும் கிட்டும். தெய்வநம்பிக்கையும் மேலோங்கும்.

இடபம்- குடும்பசுகம். நினைத்த காரியத்தில் நன்மைபிறக்கும். தொழில்துறையிலும் மதிப்புயரும். வெளியிடத்துப் பயணமும் இன்று மேற்கொள்ளப்படலாம்.

மிதுனம்- புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கலாம். புத்திரர் புகழும் உண்டு. இல்லறச்சிறப்பும் உண்டு. தொழில்துறையிலும் மகிழ்ச்சியுண்டு.

கடகம்- கடமையாற்றுமிடத்தில் பூசல்கள் தோன்றலாம். மற்றவர்களின் ஏளனப் பார்வைக்கும் ஆளாகுவீர்கள். பிரச்சினைகள் பல வந்துகுவியும். எவ்விடயத்திலும் நிதானம் நன்று.

சிங்கம்- கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். பிறர் அவப்பெயருக்கும் ஆளாகப் பார்க்கலாம். விழிப்புணர்ச்சி நன்று.

கன்னி- வீண் பொருள் விரயமுண்டு. குடும்பவாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்படும். குறிக்கோள் நிவர்த்தியாகலாம். காதல் வாழ்விலும் சுகங்கண்டானதினம்.

துலாம்- சகோதர மனத்தாக்கலுக்கு இடமுண்டு. எதிலும் தடுமாற்றநிலை தோன்றும். வீண் செலவுகளும் உண்டு. உடல்நலத்தைப் பேணவும்

விருச்சிகம்- தாய்வழித் தனவரவுமுண்டு. உறவினர் வருகை உற்சாகத்தையளிக்கும். நன்மையான திருப்பங்களும் இடம்பெறும். புதிய தொழிலுக்கான வாய்ப்பும் கிடைக்கலாம்.

தனுசு: தெளிந்தமனமும் தெய்வ சிந்தனையுமுண்டு. அமைதியுடன் கூடிய வாழ்வுமுண்டு. எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றிகாண்பீர்கள். சுபதினம்.

மகரம்- கழுகுப் பார்வை வட்டமிடும். அவசரக்கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும். மனதில் விரக்தி தோன்றும். வீணான சிந்தனைகளினால் சோர்வுநிலை தென்படும். உஷாராகயிருக்கவும்.

கும்பம்- களவிரவழியால் கண்ணியம் சேரும். இசைத்துறையிலும் அதிக ஆர்வம் பிறக்கும். இனசன மகிழ்ச்சியுமுண்டு தொழில்துறையிலும் முன்னேற்றம் தென்படலாம்.

மீனம்- சகோதர வழியாலும் மகிழ்ச்சியுண்டு நண்பர்களின் ஆதரவுமுண்டு. பந்துக்களின் தொடர்பும் பெருகும். குடும்பத்திலும் பரவசமான சூழ்நிலை தோன்றும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# 'அந்தத்' தமிழகம் நோக்கி .....

— தி. பொன்னம்பலவாணர்

யாழ்ப்பாணத் தவர்கள் அக்காலத்தில் சிதம்பரத்தில் பதினான்கு மடங்களை நிறுவியுள்ளனர். இவற்றில் பல ஞானப்பிரகாசம் குளத்தை அடுத்தே விளங்குகின்றன. இம்மடங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சிதம்பரம் செல்பவர் தங்கியிருக்க வேண்டிய உதவிகளைச் செய்ததோடுசிதம்பர ஆலயத்திலும் வருடந்தோறும் மாதந்தோறும் தினந்தோறும் பூசை அபிஷேகம் போன்றவற்றுக்கு பொருட்களும் பணமும் வழங்கும் இடங்களிலும் குறைவாக கிடைப்பது மட்டுமின்றிகிடைக்கும் வருவாயும் உரியதர்மங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் போகின்றன. சிலவருடங்களுக்குமுன் ஏற்பட்ட அரசநெருக்கடிகளால் பணம்அனுப்புவதில் அரசாங்கத்தால் ஏற்பட்ட தடையுண்டானகாலதில் யாழ்ப்பாணத்திலிருந்து பணமனிப்புவது நின்றது ஆனால் பணமனுப்பும் வாய்ப்புக்கள் ஏற்பட்டபின்னரும் சிதம்பரத் தருமத்துக்கு யாழ்ப்பாணத்தவர்களின் பணம் செல்லாமலிருப்பது நமது தவக்குறை

## சிதம்பரத்தில்

## யாழ்ப்பாணத்தவருக்கு

## 14 மடங்கள்

தர்மஸ்தாபனமாகவும் விளங்கியிருக்கின்றன.

இம்மடங்களுக்கு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சிதம்பரத்திலும் சிதம்பரத்தின் அயல்கிராமங்களிலும் பொருள் வருவாய்க்கு பகாரமான சொத்துக்கள் இருக்கின்றன. இச்சொத்துக்களின் வருவாய் பல வென்றே சொல்லவேண்டும்.

நம்முன்னோர் நடராசப் பெருமானின் வழிபாட்டில் சேர்வதற்கென அர்ப்பணித்த பொருள் அதற்கெனப் பயன்படுத்தப்படாதது வேறுசாதாரண தேவைகளுக்கு உபயோகிக்கப்படும் சம்பந்தப்பட்ட சாட்சியாக விருந்த அனைவருக்கும் தீமையையே தப்பாது உண்டாக்கும்.

சிதம்பரத்தில் உள்ள மடங்கள் யாத்திரீகர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் தங்க இயலாத விதத்தில் உள்ளன. அக்காலத்தைப் போல இக்காலத்தில் பலர்செல்லாதபோதும் செல்லும்சிலர் நம்மவரின் மடத்தில் தங்கலாம் என்ற உறுதியுட செல்லும் நிலையை உண்டாக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தவரல்லாத யாத்திரீகர்களும் அம்மடங்களில் தங்கலாம் என்றநிலை இருக்கும்போது அப்புண்ணியம் பெருமையுடையதயிருக்கும்.

[5]

பதினான்கு மடங்களும் ஒன்றுபட்டு சிதம்பரத்தில் வசதியான யாழ்பாணத்தவர்களுக்கும் சில சலுகைகளை வழங்கும் அடிப்படையில் ஒரு 'லாட்ஜ்' நிர்வகிக்கும் நிலையாவது ஏற்படுவது அவசியம் காலத்திற்கு ஏற்ற பணியாகவும் இருக்கும்.

இலக்கணசுவாமிகள் என மதிப்புடன் குறிப்பிடப்படும் முத்துக்குமாரத் தம்பிரானின் சமாதி ஞானப்பிரகாசகுளத்தில் வடகிழக்குப் பக்கத்தில் முன்பு இருந்ததாம். இப்போது சிதம்பரம் நரசபையோ - கனகசபை நகர்நிர்மாண அமைப்போ அச்சமாதியை குளத்தின் தென்கிழக்கு பகுதிக்கு நகர்த்தியிருக்கின்றது. இப்படி நகர்த்துவது கூட மன்னிக்ககூடியது ஆனால் சமாதி உள்ள சூழ்நிலை புனிதமற்றதாகவும் பராமரிப்பற்றதாகவும் இருப்பது வேதனை அளிக்கின்றது. இச்சமாதியின் நிலை யாழ்ப்பாணத்தவருக்கு மட்டுமன்றி திருவாவடுதுறை ஆதீனத்துக்குமே சிறுமையை உண்டுபண்ணுவதாயுள்ளது. ஏனெனில் இலக்கணத் தம்பிரான் திருவாவடுதுறை ஆதீனத்தின் தம்பிரான் எனப்புகழ்பெற்றவர்


சிதம்பரத்திலுள்ள யாழ்ப்பாணமடங்கள்- யாழ்ப்பாணத்திலுள்ள சிதம்பர தருமம் என்பன உயரியநிலையில் இருக்கும் காலமே யாழ். சைவமக்களின் உன்னத காலமாகும் எனலாம்.

இம்மடங்கள் ஆறுமுகநாவலர் காலந்தொட்டு சமயத் தொடர்புகளை எம்மவரிடையே தீவிரமாக ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இன்று அவை கேட்பாரற்றுள்ளன இவற்றின்மகிமை தற்போது புரியாதிருக்கலாம் ஆனால் எமது மதம் சார்ந்த பரந்ததொடர்புகளை ஏற்படுத்தும் என்ற ரீதியில் இம்மடங்கள் பெரும் துணைநிற்பனவாக உள்ளன.

(தொடரும்)

## ஒலிப்பதிவு நாடாவில்

# தெய்வீகப் பாடல்கள்



கந்தபுராண மரபில் ஊறியவர்கள் எனப் புகழப்படும் யாழ்ப்பாணத்தவர் அண்மைக்காலமாகத் தேவாரம் திருவாசகம் போன்ற அருட்பாக்களை பாடுவதோ கேட்பதோ படிப்பதோ அருகிவருகின்றது. காரணம் நாட்டுச் சூழ்நிலையோடு தேவாரம் போன்ற அருட்பாக்களின் புலமையின்மையும் இந்தத் தலைமுறையினரை அவ்வழியில் நெறிப்படுத்தாமையுமே ஆகும். இத்தகைய ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இன்னிசைவேந்தர் திரு பொன். சுந்தரலிங்கம் அவர்கள் தேவார திருவாசகங்களையும் மற்றும் பல அருட்பாக்களையும் தானே இனிமையுடன்பாடி ஒலிப்பதிவுநாடாக்களில் பதிவுசெய்து வெளியிட இருப்பது காலத்தின் தேவை பற்றித்து செய்டமோர் சிறந்த பணி என்பதோடு ஆறு ஒலிப்பதிவு நாடாக்கள் ஒருவரால் ஒரே நேரத்தில் வெளியிடப்படுவது இலங்கை இசைவரலாற்றில் ஓர் சாதனையும் ஆகும்

புங்குடுதீவை பிறப்பிடமாகக்கொண்ட திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைபயின்று முதற்புள்ளி பெற்ற முதல் மாணவனாய் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தமிழகத்தின் புகழ்பெற்ற இசைக்கலைஞர்கள் திரு எம். எம். தண்டபாணிதேசிகர் ரி. கே. ரங்காச்சாரி, வேணுகோபால ஐயர் போன்றோரிடம் முறைப்படி இசைபயின்றதோடு அவர்களுடன் மேடையில் பாடும் பெருவாய்ப்பும் பெற்றவர் இந்தியா, மலேயா, இந்தோனிஸியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச்சென்று கச்சேரிகள் நிகழ்த்தியுள்ள இவர் 1971 தொடக்கம் அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவராக இருந்து பல இசைப்பணிகள் ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

பன்னிரு திருமுறைகளும், திருப்புகழும் தனித்தனி ஒவ்வொரு ஒலிப்பதிவு நாடாவிலும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி சிவபுராணம் திருப்படையாட்சி உட்பட திருவாசகங்கள் இரு ஒலிப்பதிவு நாடாக்களிலும் கந்தரலங்காரம், திருச்செந்தூரன் பிள்ளைத்தமிழ், கதிர்காம முருகன் பிள்ளைத்தமிழ், மாவை முருகன் பிள்ளைத்தமிழ், சந்நிதிமுருகன் பிள்ளைத்தமிழ் நல்லூரான்வெண்பா ஆகியவை உட்பட முருகன்பாடல்கள் ஒரு ஒலிப்பதிவு நாடாவிலும், அபிராமியந்தாதி, அபி

[7-ம் பக்கம் பார்க்க]


# பவர்ஸ்
## வீட்டுத் தோட்ட உரவகைகள்




MASTERS ABC 2/83

தேவையான விசேட உரத்தின்
இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல. 3. பழ மரங்கள்
இல. 4. கிச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னுசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. ரோசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – "விசேடம்"
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

2 கி. கி பொலித்தீன் பக்கெட்டின் விலை ரூபா 9/- மட்டுமே.

லிபேர்ட்டி மினி
10-30, 12-30, 2-30, 4-45, 7-00
Eagles Attack at Dawn
இளைஞர்கள் பார்க்க வேண்டிய படம்

ராஜா மினி
தினசரி 10-30, 2-30, 6-30
ஆனந்தபாபு
(டிஸ்கோ டான்ஸ் புகழ்)
வெற்றிக் கனி
ஈஸ்ட்மன் கலர்
ஒரிஜினல் பிரதி

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்.)

மனோகரா
வெண். திரையில்
10-30, 2-30, 6-30, 9-30
இன்று முதல்
பாக்கியராஜ், பூர்ணிமா, சுமன்
கன்னாபெட்டி சிங்காரம் நடிப்பில்
டார்லிங்
DARLING
டார்லிங்
(கலர்)

ஸ்ரான்லி மினி
"K5" திரைவானில்
10-30, 12-30, 2-30 4-30, 6-30
Sophia Laurance in
Sun Flower
(Love story)
இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது தனது காதலியைப் பிரிந்து போருக்குச் செல்லும் ஒரு வீரனின் காதல் காவியம்.

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
Fred Williamson in
The Inglorious Bastards
இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இராணுவ வாகனமொன்றில் ஏற்றிக் கொண்டு செல்லப்படும் சில இளைஞர்கள் தப்பி இராணுவத்தினருடன் நேரடியாக மோதும் பலத்த பெரும் தாக்குதல்கள்.

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30 p.m.
26 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்,

ஸ்ரீதேவி சினிமா
10-30, 2-30, 6-30
2-வது வாரமாக ஓடுகிறது!
இளையராஜன், விஜயசந்திரன், பூர்ணிமா ஜெயராசன், லக்ஷ்மிதா, ஜெய்சங்கர் நடித்த
வாசு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்

## மகா கும்பாபிஷேகம்

(ஊரெழு)

ஊரெழு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த புனருத்தாரண வேலைகளைத் தொடர்ந்து எதிர்வரும் 16-ம் திகதி திங்கட்கிழமை மகா புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. இதுதொடர்பான கிரியைகள் கடந்தபுதன் கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிமுதல் மாலை 5 மணிவரையில் பக்தர்கள் எண்ணெய் சாத்தும் வைபவம் நடைபெறும், சிவாகம வித்தியாபூஷணம் சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் பிரதம குருவாகவிருந்து கும்பாபிஷேகக்கிரியைகளை நடத்தி வைப்பார்.

## உயர்நிலை மாணவர்ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாகியிருக்கும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு நிவாரண உதவி வழங்குமுகமாக உயர்நிலை மாணவர் ஒன்றியம் நிதி சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

வீடுகளில் நிதிசேகரிக்கவரும் தொண்டர்களுக்கு இயன்றளவு உதவுமாறும் நிதிவழங்குவோருக்குப் பற்றுச்சீட்டுவழங்கப்படும் என்றும் உயர்நிலை மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (மா)

## சுகாதார சேவையுடன் விவசாயமும்இணைய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

"ஒருமனிதனுக்கு நோய்வந்தபின் காப்பதைவிட வரும்முன் காப்பதே பயனுடையதாகும். இந்நோக்கத்திற்காகத்தான் ஆரம்பசுகாதார கவனிப்பும் முதலுதவிச் சிகிச்சையும் அவசியமாகின்றது".

இவ்வாறு ஏழாலை வடக்கில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையமொன்றை திறந்துவைத்துப் பேசிய வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் 'ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கவென இங்கு திறந்து வைக்கப்படும் இந் நிலையத்தில் சேவையுடன், விவசாயசேவையிலான வீட்டுத் தோட்டம், குடிசைக் கைத்தொழில் போன்ற பயனுள்ள திட்டங்களும் இணையவேண்டும்.

சத்துள்ள உணவுக்கு சந்தைக்குச் செல்லாமல் எம்மையாலே உற்பத்தியாக்கிஉண்ண வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமாநிலசுகாதாரப் போதனாசிரியர் திரு. வைத்தீஸ்வரன் த. திருஞானசம்பந்தர், திருமதி மல்லிகாதேவி சிவகணேசன், திரு. அரசலிங்கம், சி. கந்தசாமி ஆகியோரும் இத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (து)

## ஒலிப்பதிவு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமிப்பதிகம், மதுரைமீனாட்சி பிள்ளைத்தமிழ், துர்க்கையம்மன் பிள்ளைத்தமிழ், கௌரியம்பாள் பிள்ளைத்தமிழ், கண்ணகையம்பாள் அந்தாதி, நயினை நாகபூசணி அம்பாள் பிள்ளைத்தமிழ் ஆகியவை உட்பட அம்பாள் பாடல்கள் ஒரு ஒலிப்பதிவு நாடாவிலுமாக ஆறு ஒலிப்பதிவு நாடாக்கள் எதிர்வரும் 15ம் திகதி நல்லூர் பூங்காவனத் திருவிழா வன்று நண்பகல் 1 30 மணிக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் சோமசுந்தர பரமாச்சாரியசுவாமிகளால் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் வெளியிடப்படவுள்ளது,

இ. ஜெயராஜ்

## இலவச உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்டு அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து வந்த சண்டிருப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ளவர்களுக்கு உணவுப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அரிசி, மா, சீனி, உட்பட உணவுப் பொருட்கள் மூன்று வாரங்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருவதாகவும் இதுவரை பெறாதவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

அகதிகளாக வந்து தத்தம் பகுதிகளில் குடியிருப்பதற்கு சொந்த வீடற்றவர்கள் கிராம சேவையாளர், பொலிசாரின் சிபார்சுக் கடிதங்களுடன் நல்லூர், பருத்தித்துறை, வேலணை உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு அதற்கேற்ற நிவாரணம் பெறலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## போட்டி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக்கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமைஅன்று நடைபெறவுள்ளது.



மாவிட்டபுரம் பட்டிக்கடவைக் கிராமத்தில் அமைக்கப்படவிருக்கும் நந்தீஸ்வரர் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இடமிருந்து வலமாக வைத்தியகலாநிதி சி. கதிரவேற்பிள்ளை, எம். வேல்ஐயா, தொழிலதிபர் க. கனகராசா, சமாதானநீதவான் சி. இராசலிங்கம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

கட்டைவேலி-நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்

அறிவித்தல்

30-09-85 இல் அங்கத்துவ இடாப்பு முடிவுறச் செய்து கிளைவாரியாகத் தயாரிக்கப்படும் வாக்காளர் இடாப்பின் அடிப்படையில் கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுக்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே அங்கத்தவராவதற்குத் தகுதியுடையவர்கள் விண்ணப்பப்படிவத்துடன் ஒரு பங்கின் பெறுமதி ரூபா 10/-யும், குறைப்பங்கை உடைய அங்கத்தவர்கள் மிகுதித்தொகையையும் 30-09-85-க்கு முன் சம்பந்தப்பட்ட கிளைமுகாமையாளரிடம் செலுத்தி வாக்காளர் இடாப்பில் இடம் பெற்று ஜனநாயக ஆளுமைக்கு உதவுமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்
கட்டைவேலி-நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி.

12-09-85. 709

## ஓராண்டு நினைவஞ்சலி

கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

(ஆனைக்கோட்டை)

மலர்வு:

10-07-1912



உதிர்வு:

26-08-1984

எமது அன்புத் தெய்வமே! எமது உறவுக்கூட்டை விட்டு நீங்கள் பிரிந்து ஓராண்டு கழிந்தது ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டு சென்றாலும் நாம் உங்கள் பாசத்தை மறவோம் திதி நாளான இன்று (14-9-85) உங்கள் ஆத்ம சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாடசாலை ஒழுங்கை,
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. [685]

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள பிள்ளையார் தண்ணீர் பந்தலின் நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் க. சுப்பிரமணியம் செயலாளர்: த. கருணாநிதி, பொருளாளர் விஜயகுமார்.

## திருப்பணிச்சபை பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு கற்பக விநாயகர் ஆலயத் திருப்பணிச் சபை தமது பரிபாலன சபையின் மறைந்த முன்னாள் தலைவருக்கு அவரின் சேவைகள் குறித்து நன்றியும் சேவைப் பாராட்டையும் தெரிவித்துள்ளது

கோப்பாய் தெற்கு கற்பக விநாயகர் ஆலயத்திருப்பணியைப் பல இடையூறுகள் மத்தியில் தமது புத்திசாதுரியத்தினால் செய்து முடிக்க மறைந்த முன்னாள் சட்டத்தரணியும், விநாயகர் ஆலய சபைத் தலைவருமான திரு. சி. அமிர்தலிங்கம் உதவினார் என்றும், இவ்வாலயத் திருப்பணிக்குச் சேகரித்த பணத்தை மிகவும் சிக்கனமாகச் செலவு செய்தார் என்றும், தமது சொந்தப்பணத்தையும் ஆலயத்துக்குச் செலவு செய்தார் என்றும் இவ் வாலயச் செயலாளர் திரு க. குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

## வேளாங்கண்ணி திருவிழா

(யாழ்ப்பாணம்)

முகமாலை புனித ஆரோக்கிய அன்னை (வேளாங்கண்ணி) திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது

இன்றுகாலை ஆராதனையும் பவனியும் நாளை காலை திருச்சொரூப பவனியும் இடம் பெறவுள்ளது.

## 'வீரவேங்கை' நாடகம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை இந்து இளைஞர் மாணவர் பேரவை நடாத்தும் 'வீரவேங்கை' என்னும் நாடகம் நாளை ஞாயிறு இரவு ஏழாலை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது

வான்மதி நாடகமன்றம் இந்த நாடகத்தை தயாரித்துள்ளது. (மா)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# தைரியத்தை கொடுக்குமாறு இறைவனை வேண்டினேன்

## வண. சிங்கராயர் சாட்சியம்

(கொழும்பு)

''பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நீர்வேலி வங்கிக் கொள்ளையில் என்னைச் சம்பந்தப்படுத்தியதால் நீர்வேலி என்ற வார்த்தையை உபயோகிக்காமல் இருப்பதற்கு எனக்குத் தைரியத்தைக் கொடுக்கும்படி நான் கடவுளிடம் வேண்டினேன்''

இவ்வாறு வண பிதா. ஆபரணம் சிங்கராயர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சாட்சிய மளிக்கையில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

அரசதரப்பு சட்டத்தரணி ஜி. ஆர். டி. சில்வா இவரைக் குறுக்குவிசாரணை செய்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில்: ''இந்தப் பணம் தொடர்பாக பிரபாகரன் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பதற்கு எனக்குத் தைரியத்தைக் கொடுக்கும்படியும் நான் கடவுளை வேண்டினேன்'' என்றார்.

## இன்று ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரி இலங்கை வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான இம்மாத ஓய்வூதியம் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை ஒன்பது மணி முதல் 12 மணி வரை யாழ் பொலிஸ் நிலைய வளவிலுள்ள இலங்கை வங்கியில் வைத்து வழங்கப்படுமென யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ச)

## நல்லூர் உற்சவம் சமயப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை, நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி நடாத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு:-

1-ம் பரிசு:- செல்லத்துரை பிரபாகரன் நல்லூர். 2-ம் பரிசு:- முத்துச்சாமி சாந்தகௌரி பாண்டியன்தாழ்வு' 3-ம் பரிசு:- இளையதம்பி திருஞானசம்பந்தர்-நல்லூர், 4-ம் பரிசு;: குருநாதன் திருமகள்-யாழ்ப்பாணம், 5-ம் பரிசு:- கார்த்திகேசு ஜெயமதி மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி, 6-ம் பரிசு:- (1) ஷோபனா சர்வேஸ்வரஐயர் - நல்லூர். [2] திருநாவுக்கரசு பரமேஸ்வரி-யாழ்ப்பாணம்,

8-ம் பரிசு:- [1] மகாலிங்கம் நீலகாந்தன், 22, புகையிரத நிலைய வீதி, கொக்குவில்; (2) தாமோதரம்பிள்ளை சுமனாம்பிகை, நல்லூர்;

10-ம் பரிசு:- திருநாவுக்கரசு தர்மினி நல்லூர்.

பரிசுகள் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை அறுமணிக்கு மேற்கு வீதியிலுள்ள மாநகர சபை அலுவலகத்தில் ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் அவர்களால் வழங்கப்படும்.

# இந்த 'பானங்களுக்கு' நாளைமுதல் சீரான விலை

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களினால் இதுவரை மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்ட கள்ளிற்கு நாளை பதினைந்தாம் திகதியுடன் ஒரே சீரான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாழ்க்கைச் செலவு உயர்வினாலும், இடத்திற்கு இடம் ஏற்றத் தாழ்வுள்ள விலைகளிலும் பாதிப்படைந்த சீவல் தொழிலாளர்கள் நன்மையடையவுள்ளனர்.

இடத்திற்கிடம் வெவ்வேறு விலைகளில் கள்ளைப் பெற்று வந்த யாழ். கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பாவனையாளர்களும் சகல இடங்களிலும் ஒருபோத்தல் பனங்கள் 4 ரூபா 50 சதப்படியும், தென்னங்கள்ளு 5 ரூபாவாகவும் ஒரே சீரான விலையில் கள்ளைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தீர்மானம் நேற்று நடைபெற்ற தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்தக் கருத்தரங்கில் எடுக்கப்பட்டதாக வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொது முகாமையாளர் திரு. ஆ. நடராசேந்திரன் தெரிவித்தார்.

பாவனையாளருக்கு தரமான சுத்தமான கள்ளினை வழங்கவும், தொழிலாளர்களின் உற்பத்தி முழுவதையும் கொள்வனவு செய்யவும் சங்கங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் சங்கங்களின் தவறணைகள் தவிர்ந்த வேறிடங்களிலோ, தனியார் வீடுகளிலோ கள் விற்பனை செய்யக்கூடாதெனவும், கள்ளில் கலப்படம் செய்வது சமூக விரோதச் செயலென நலன் விரும்பி அமைப்புக்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும், இத்தீர்மானங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்த குறிப்பிட்ட அமைப்புகள் முன்வந்துள்ளதாகவும் சமாச பொதுமுகாமையாளர் கூறினார்.

## அபகரிப்பும் தாக்குதலும்

(யாழ்ப்பாணம்)

சொந்தப் பாவனைக்கு நன்னீர் பெறச் சென்ற ஒரு கோஷ்டியினர் குறிப்பிட்ட வீட்டிலிருந்து நீரைப் பெறறுக் கொண்டுவிட்டு, அங்கிருந்த மோட்டார் சைக்கிளையும், மற்றும் சைக்கிள்களையும் எடுத்துச் சென்றனராம்

அச்சுவேலி இடைக்காட்டுப் பகுதியில் இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

# ஒட்டுசுட்டானில் உண்ணாவிரதம், ஊர்வலம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள பல ஆயிரக்கணக்கான மக்கள், வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்துவரும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்திய பின்னர் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

முத்தையன்கட்டு குடியேற்றத்திட்டத்திலுள்ள முருகன் விநாயகர் ஆலயத்தில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

கற்சிலைமடு, சமளன்குளம், புளியங்குளம், கருவேலன்கண்டல், கூனாமுறிப்பு, பேராற்றடி, வசந்தபுரம் ஆகிய இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் உழவு இயந்திரங்களில் ஊர்வலமாகச் சென்று முத்தையன்கட்டு குடியேற்றத் திட்ட மக்களுடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்தனர்.

குடியேற்றத் திட்டத்தில் உள்ள பெரும்பாலான மலையக மக்களும் கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதிகள் மத்தியில் பக்திப் பாடல்கள், கலந்துரையாடல்கள் இடம்பெற்றன

உண்ணாவிரதத்தை முடித்து வைத்து இடம்பெற்ற சொற்பொழிவின்போது, சிறைச்சாலையில் இருக்கும் தமிழ் இளைஞர்களை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தவேண்டும் அல்லது விடுதலைசெய்யவேண்டும் என்றும் அவ்விதம் நடக்காதபட்சத்தில் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து தொடர்ந்தும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## ''அகதிகளுக்கு ஆதரவு நல்க''

(யாழ்ப்பாணம்)

''அகதிகளான நமது மக்களுக்கு ஆதரவளிக்கவேண்டும்'' என்ற 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்.) 'ஈழம் செய்திப் பலகை' சுவரொட்டி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது:

அந்தச் சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திருகோணமலை வவுனியா, மன்னார் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகினர். உணவு, உடை, மருத்துவ வசதி ... இன்றி தவிப்பு, உயிராபத்தான நிலையில் பலர் பசிளம் பாலகர் பசியால் துடிதுடிப்பு.

## 7-ம் கட்ட உண்ணாவிரதம் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் 6-ம் கட்டம் நேற்று மாலை முடித்து வைக்கப்பட்டது.

சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களில் சிவச்செல்வம், சந்திரதேவரோதயன், பரமசாமி ஆகியோரின் தாய்மார்கள் நேற்று ஒருநாள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு சகலருக்கும் பழரசம் கொடுத்து முடித்து வைத்தனர்.

அதேசமயம் நேற்று மாலை 6 மணிக்கு 7-ம்கட்ட உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. [மா]

## டிசம்பரில் தேர்தல்

[சென்னை]

தமிழ் நாடு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் டிசம்பர் மாதம் 7-ம் திகதி நடைபெறவுள்ளது.

## சந்தர்ப்பத்தை ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலை முன்னணி ஏற்றுக் கொள்ளச் செய்வதற்குரிய முயற்சிகளை தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ளும்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று திரு. அமிர்தலிங்கம் செய்தியாளர்களிடம் பேசுகையில்: ஈழம் தேசிய விடுதலை முன்னணிக்கு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி விடுத்திருக்கும் அழைப்பு அந்த முன்னணிக்கே உரியது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஏற்கனவே டில்லியில் இந்திய அரசு உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டனர் என்றும், புதிய அணுகுமுறை பற்றிப் பொதுவான நிலையை உருவாக்க இப்பொழுது நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதென்றும், ஆறு தீவிரவாதக் குழுக்களும் சந்திக்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி விரும்புவதாகவும் இதற்கு முன்னோடியாக ஈழம் தேசிய விடுதலை முன்னணி டில்லி சென்று பிரதமரையும் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்திக்கவேண்டும்என்றும்கூறினார்

## மரண அறிவித்தல்

### திருமதி க. மகேஸ்வரி

திருமதி மகேஸ்வரி கணேசரத்தினம் காலமாகிவிட்டார் இவர் திரு. கணேசரத்தினத்தின் அன்பு மனைவியும், திரு கனகசபாபதி (சாவகச்சேரி, திருமதி புவனேஸ்வரி இராமசாமி (அச்சுவேலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சன், தயன், அபிராமி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (14-9-1985) இன்று காலை 10 மணிக்கு இல. 3, இரண்டாம் ஒழுங்கை, பிறவுன் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். நண்பர்கள், உற்றார், உறவினர் யாவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பொ. கணேசரத்தினம்
இல. 3, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (705)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் கந்தையா

கெருடாவிலைச் சேர்ந்த இளைப்பாறிய கல்லூரி அதிபரும் முன்னாள் தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளருமான மயில்வாகனம் கந்தையா காலமானார். இவர் தபோதினி (இளைப்பாறிய ஆசிரியை, மெதடிஸ்த கல்லூரி) யின் அன்புக்கணவரும், கலாநிதி (சட்டத்தரணி), ஜெயக்கிருஷ்ணன் (சட்டத்தரணி), வாமதேவன் (மக்கள் வங்கி திருகோணமலை), ஜெயரூபிணி (மாணவி, மெதடிஸ்த கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாலயோகினி திறந்த பல்கலைக் கழக (முன்னாள் உதவிக்கல்வி அதிகாரி, கௌசல்யா, ஆகியோரின் மாமனாரும் மதுசூதனன், ஹம்சனும் பிகை, ஜனனி ஆகியோரின் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் புலோலி தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று 14-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். உற்றார் உறவினர் இந்தத் தகவலை ஏற்றுக்கொள்ளவும். (724)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் முத்துப்பிள்ளை

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவஞானப்பிரகாசம் 'கணக்காளர் நைஜீரியா), பரமேஸ்வரி, சிவாநந்தராசா (சுகாதார பரிசோதகர் மாறவில), சிவபாதசுந்தரம் (பொறியியலாளர் சுவாசிலாந்), சிவநாதன் (அஞ்சல் அதிபர், அரசாங்க அதிபர் அலுவலகம் வவுனியா), சிவராசா (தொலைத் தொடர்பு மாவட்ட பரிசோதகர் சில்கிசை), சிவநேசன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் இந்தியா), சிவரத்தினம் (கால்நடை வைத்தியர் வத்தேகம), காலஞ்சென்ற சிவலிங்கம் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்), சிவபாலன் (களஞ்சியப் பொறுப்பாளர் (ரேணுகா எண்டர்பிரைசெர்ஸ் கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும், லீலாவதி, பிறைசூடி (பிரதம இலிகிதர் பெருந்தெருக்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்), சீதா, செல்வமணி, தெய்வீகராணி, இராசமலர், செல்வராணி, இந்திராணி (ஆசிரியை கண்டி), ஜெயபரஞ்சிதம், ஜெயலட்சுமி (ஆசிரியை கொள்ளுப்பிட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [14-09 85] சனிக்கிழமை 3-30 மணியளவில் கோப்பாய் வடக்கு 'முத்துமாளிகை' இல்லத்தில் நடைபெற்று, கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். (720)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ... மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under namber B 10036/81. Eelananu P. O. Box: 49, Telegram: Eelanabu Telephone: 22389 — 24126